## <u>திருவேற்காடு நகராட்சி</u>
## <u>அவசரக் கூட்டம்</u>

**திருவேற்காடு நகராட்சியில் 2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நகராட்சி மன்ற கூடத்தில் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அவசரக்கூட்ட தீர்மான நகல்.**

**நகராட்சி அலுவலகம்,** **நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு** **திருவேற்காடு நகராட்சி.**

### <u>பொருள் எண். 1</u>

நடைபெற்ற உள்ளாட்சி தேர்தலில் மாபெரும் வெற்றி பெற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு திருவேற்காடு நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பாக நன்றி தெரிவித்தல்

**தீர்மான எண். 1** **நாள்.11.03.2022**

**தீர்மானம் : பதிவுச்செய்யபடுகிறது.**

---

### <u>பொருள் எண். 2</u>

திருவேற்காடு நகராட்சியில் நகர்மன்ற தலைவர் அவர்களின் பயன்பாட்டிற்கு வாகனம் இல்லாததால் புதிய வாகனம் Toyota Innova Crysta அரசின் GEM விலைபட்டியலின் அடிப்படையில் வாங்கிக் கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.22,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**
1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. மேற்கண்ட வாகனத்தின் அவசியம் கருதி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் அனுமதி பெற கருத்துரு அனுப்பிடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.2019/2018/இ1**

**தீர்மான எண். 2** **நாள். 11.03.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

### <u>பொருள் எண். 3</u>

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்கள் 2021–22ம் ஆண்டு சட்டமன்ற தொடரில் நகராட்சி நிர்வாகத்துறை மானிய கோரிக்கையின் போது அறிவிப்பு எண்.12–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களின் நலனுக்காகவும், மின்சிக்கனத்தினை கருத்தில் கொண்டும் நகரில் ஏற்கனவே உள்ள LED தெருவிளக்குகள் அல்லாத மற்ற தெருவிளக்குகளை மாற்றி குறைந்த ஆற்றலில் அதிக வெளிச்சம் வழங்கக்கூடிய அதிநவீன LED தெருவிளக்குகளாக மாற்றி அமைத்திட அறிக்கை வெளியிட்டதின் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28 அவர்களின் கடித ந.க.எண்.27000/2021/WB நாள்.02.03.2022–ன்படி இந்நகராட்சியில் உள்ள தெருவிளக்குகளை மாற்றி அமைக்கும் பணிகள் மேற்கொள்ள கருத்துரு கோரப்பட்டது. அதன்பேரில் திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குறைந்த ஆற்றலில் அதிக

வெளிச்சம் வழங்கிடும் புதிய வகை LED தெருமின்விளக்குகள் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1310.45 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| SI No | Catergory | Type of Lamp | Quantity (in mtrs) | Rate per unit | Total Cost (Rs.) |
|---|---|---|---|---|---|
| | | | | *** | |
| I | **Conversion of Existing Lamps in to LED** | | | | |
| | **LED Street Light** | 20W LED | 1030 | 4090 | 4212741 |
| | | 40W LED | 597 | 6330 | 3779039 |
| | | 70W LED | 2785 | 13029 | 36286907 |
| | | 120W LED | 698 | 18891 | 13185981 |
| | **LED Flood Light** | 200W LED | 624 | 58558 | 36540242 |
| II | **Street light Controllers (Switches)** | Single Phase | 200 | 43680 | 8736000 |
| | | Three Phase | 30 | 54880 | 1646400 |
| III | **Individual Lamp Monitoring Device (ILM)** | With Dimming | 3237 | 4704 | 15226848 |
| | | Without Dimming | 0 | 4368 | 0 |
| IV | **Centralized Control & Monitoring Centre (CCMC)** | | 1 | | 7000000 |
| | **Grand Total - Cost** | | | | **126614157** |
| | Add GST | | | 0.00% | **0** |
| | LWF (Labour Welfare Fund) | | | 1.00% | **1266142** |
| | conversion charges for TANGEDCO | | | 2.50% | **3165354** |
| | Total Cost of the Project | | | | **131045653** |

அலுவலக குறிப்பு:—

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்படி பணிக்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை—28 அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.4508/2021/இ1**

**தீர்மான எண்.3** **நாள்.11.03.2022**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

---

*ஒம்/—.* **E. கிருஷ்ணமூர்த்தி**

**நகர்மன்றத் தலைவர்,**
**திருவேற்காடு**

**/உண்மை நகல்/**

**ஆணையர்,**

**திருவேற்காடு நகராட்சி.**